<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 31 உட்பிரிவு 3ன் கீழ் மாநில குழந்தைகள் கல்வி உரிமை ஆணையம் ஏற்படுத்துதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வித்(சி2)துறை</u>

அரசாணை(நிலை)எண்.7 நாள்: 18.01.2011.
(திருவள்ளுவர் ஆண்டு 2042
தை 4)

படிக்கப்பட்டவை:

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழு தலைவரின் கடிதம் நாள் 28.10.2010.

<u>ஆணை:–</u>

குழந்தைகளுக்கான தொடக்கக்கல்வியும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக கருதப்பட ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு தகுந்த திருத்தம் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனையொட்டி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009 மைய அரசால் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தரமான இலவச தொடக்கக் கல்வி வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் தகுந்த விதிகளை இயற்ற மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 31 உட்பிரிவு 3ன் கீழ் ‘‘மாநில குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம்’’ (State Commission for Protection of Child Rights) இல்லாத மாநிலங்களில் அம்மாதிரியான ஒரு ஆணையத்தை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. 2005ல் மத்திய அரசால் இயற்றப்பட்ட குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் தேசிய அளவில் ஒரு ஆணையத்தையும் (National Commission for Protection of Child Rights) மாநிலங்கள் அளவில் ஆணையங்களையும் (State Commissions for Protection of Child Rights) உருவாக்கிட வழி வகை செய்யப்பட்டுள்ளது.

த.பி.பா.

3. தமிழ்நாட்டில் மாநில குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. இவ்வாணையம் ஏற்படுத்தப்படும் வரையில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கல்வி உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் குழந்தைகள் கல்வி உரிமை ஆணையம் (Right to Education Protection Authority) ஒன்றை உருவாக்கலாம் என குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழு தலைவர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4) குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்ட ஆலோசனைக் குழு தலைவரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்படும் வரையில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கல்வி உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் மாநில குழந்தைகள் கல்வி உரிமை ஆணையம் (REPA) ஒன்றை ஏற்படுத்தலாம் எனவும் இவ்வாணையம் ஒரு இடைக்கால அமைப்பாக செயல்படலாம் எனவும் இக்கல்வி உரிமை ஆணையம் கீழ்க்கண்ட வகையில் தலைவர் மற்றும் உறுப்பினர்களை கொண்டு செயல்படலாம் எனவும் முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

1. இவ்வாணையத்தின் தலைவராக சிறந்த கல்வி நிபுணர் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் அல்லது குழந்தைகள் உரிமைகளை பாதுகாப்பதில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றியவர் செயல்படலாம்.

2. தலைவர் தவிர இன்னும் இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம். அந்த இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் பெண் உறுப்பினராகவும் நியமிக்கலாம். இந்த உறுப்பினர்கள் கீழ்க்கண்ட துறைகளில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவமும், சிறந்த ஆற்றலும் உடையவராய் இருத்தல் வேண்டும்

   1) கல்வி,
   2) குழந்தைகள் நலம்
   3) இளம் வயது குற்றவாளிகள் அல்லது நிராகரிக்கப்பட்ட குழந்தைகள் அல்லது ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு அல்லது குறைபாடுடைய குழந்தைகள் பராமரிப்பு
   4) குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு
   5) குழந்தை மனோதத்துவம் அல்லது சமூகவியல்
   6) சட்டத் துறை

த.பி.பா.

5) இவ்வாணையம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள கல்வி உரிமைகளை நிறைவேற்றுவது சார்பான பணிகளை மேற்கொள்ளும். மேலும் மாநில ஆலோசனை குழு (State Advisory Council) சுட்டிக் காட்டும் பிரச்சனைகளில் மேல் நடவடிக்கை எடுக்கும். இவ்வாணையத்தின் தலைவா் மற்றும் உறுப்பினா்கள் பதவிகளுக்கான விதிமுறைகள் 2006ல் உருவாக்கப்பட்ட தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்திற்கான விதிமுறைகளைப் (National Commission for Protection of Child Rights) பின்பற்றியதாக இருக்கும்

6) மாநில குழந்தைகள் கல்வி உரிமை ஆணையத்திற்கு (REPA) தலைவா் மற்றும் உறுப்பினா்கள் நியமனம் செய்வது தொடா்பாக உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு உறுப்பினா் செயலா், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி மற்றும் பள்ளிக்கல்வி இணை இயக்குநா்(மேநிக) சென்னை–6 அவா்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறாா்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவ. ஜோதி ஜெகராஜன்,
அரசு செயலாளா்.

பெறுநா்
தலைவா்,
குழந்தைகளுக்கான இலவச மற்றும்
கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழு,
சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநா், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநா், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநா்,
சென்னை–6.
மாநில திட்ட இயக்குநா்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
உறுப்பினா் செயலா்,
குழந்தைகளுக்கான இலவச மற்றும்
கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழு,
சென்னை–6.
பணி மேலாளா், அரசு மைய அச்சகம், சென்னை–79.(2 நகல்கள்)
(தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடும் பொருட்டு)

த.பி.பா.

<u>நகல்:–</u>
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை,
சென்னை–9.
குழந்தைகளுக்கான இலவச மற்றும்
கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழுவின்
அனைத்து உறுப்பினர்கள்
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.